Annual Subscription Rs.100/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 34 இதழ் - 4 ஏப்ரல் - 2021


தனிப்பிரதி
ரூ.10/-





Regd. News Paper RNI No. TNTAM/2006/20446
Postal regn. No. Erode/26/2021 - 2023
Posted at Erode HPO on 20/21 of Every Month.
**Licensed to Post without pre payment**
**No: TN / WR / ERD / 03 / WPP / 2021 - 2023**
Published on 17/18 th of Every Month

# எங்களது இதர வெளியீடுகள்
















சர்வதேச தரத்தில், தலை சிறந்த
பிரசங்கிகளால் எழுதப்பட்ட
**சத்தியத்தின் குரல்**
என்ற நூல் வேண்டுவோர்
எங்களைத் தொடர்பு கொள்ளவும்.
– ஆசிரியர்

**தபால் செலவிற்கு பணம் அனுப்பி இந்நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்**

## திருமறை தியானம்

நம்பிக்கை தொலைக்காட்சியில்
வெள்ளி காலை 7:30 - 8.00 மணி
தமிழன் தொலைக்காட்சியில்
சனி காலை 7.00 - 7.30 மணி

## வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

- Advanced Bible Correspondence Course -

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு 7 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

விருப்பமுள்ளவர்கள்
மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.


இயக்குனர்


**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**

த.பெ.எண் 27, காங்கேயம் 638–701.
தமிழ்நாடு , இந்தியா.

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.


# 12 வித்தியாசமான தலைப்புகளில் கைப்பிரதிகள் கிடைக்கும். தேவைக்கு எங்களைத் தொடர்பு கொள்ளவும்.

















# World Evangelism Gospel Media

Rajanayagam & Benny Martin On Tamilan TV
Every Saturday 7:00 - 7:30 am

Rajanayagam & Benny Martin On Nambikkai TV
Every Friday 7:30 - 8.00 am

Arjunan on Nambikkai TV
TV : On Monday & Saturday 7.30 - 7.45 pm

Hindi TV Program : Sunny, Francis & Vinay David Speaking
Sunday & Tuesday ( 7:00 - 7:30 ) pm on
Shubhasandesh Hindi Channel

P.K. Varghese In Malayalam :
Every Saturday 6:00 - 6:30 am on Jai Hind Channel TV

Philemon & Kingsley on Tamilan TV and Nambikai TV :
Every Sunday 6:45 - 7:00 am
Every Friday 6.00 - 6.30 am
Joy TV - Saturdays 9.00 pm Salvation TV - Every Sunday 2.00 pm

Joshua & Ricky Gootam In Telugu:
Every Saturday at 6:00 pm Subhavartha Channel
Every Wednesday at 6:30 pm on Rakshana Channel
Every Thursday at 11:00 am on Rakshana Channel
Satyavani T.V. online : www.sakthitv.in
Every Wednesday & Friday at 8.00 pm

For English Voice of Truth
Contact - Brothers Philemon or Kingsley
@ Po box 15 , 45/c1 Church Lane, Coronation Street,
Arasaradi, Madurai - 625016
9244204420 / 21, 0452 - 2607026





கடந்த மார்ச் மாதம் 22, 23, 24 தேதிகளில் ஏற்காட்டில் நடந்த வேதாகம கருத்தரங்கின் போது ...

## ஆசானின் அறிவுரையிலே ...


| | |
|---|---|
| ஆசிரியர் உரை | 3 |
| தேவனுடைய வார்த்தை ... | 11 |
| பெண்கள் பகுதி | 15 |
| வாலிபர் பகுதி | 19 |
| சிறுவர் பகுதி | 21 |
| புதிய ஏற்பாட்டில் ஆசாரியர்கள் | 23 |
| முகக்கவசமும், சமூக இடை ... | 27 |
| உபதேசங்கள் தேவனுடையது | 31 |


- ஒன்றுக்கும் மேற்பட்ட இதழ்கள் வந்தால் எங்களுக்குத் தெரியப்படுத்தவும்.
- முகவரி மாற்றத்தைக் கண்டிப்பாக கடிதம் மூலம் தெரியப்படுத்தவும்.
- இந்த இதழ் மூலம் நீங்கள் அடையும் பயன்களை எங்களுக்கு தெரியப்படுத்தவும்.
- அஞ்சல் வழியில் வேதாகமம் படிப்பவர்கள் உங்களது தொலை / அலைபேசி எண்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். தாமதத்தை தவிர்க்க இது உதவும்.

– ஆசிரியர்.

# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor / Publisher

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.
PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 34 April- 2021 Issue - 4


ஆசிரியர் உரை

## திருமதி. பேதுரு

திருவாளர் பேதுரு புதிய ஏற்பாட்டிலுள்ள மிக முக்கியமான பாத்திரங்களில் ஒருவன். நற்செய்தி நூல்களில் இவன் பற்றிய காரியங்களைப் பரவலாகவும், அப்போஸ்தலர் நடபடிகள் நூலின் முற்பகுதியை ஆக்கிரமிப்பவனாகவும் காணமுடியும். இது தவிர, கொரிந்தியர், கலாத்தியர் நூல்களில் இவன் பற்றி சில குறிப்புகள் உண்டு. இன்னும், இரண்டு நிருபங்களை எழுத தேவன் இவனை அனுமதித்ததும் நமக்குத்தெரியும். இப்படிப்பட்ட இந்தப் பேதுரு பற்றி நாம் பேசுவதற்கும், எழுதுவதற்கும் ஏராளம் உண்டு. ஆம், இயேசு ஆண்டவரால் தன்னுடைய சீடர்களில் ஒருவனாக இருக்கும்படி கலிலேயாக் கடற்கரையிலிருந்து அழைக்கப்பட்ட (மாற்கு 1:11) அந்த நாள் தொடங்கி, நான் என் கூடாரத்தை விட்டுப்போவது சீக்கிரம் நேரிடும் (II பேதுரு 1:13) என்று அறிவிக்கும் காலம் வரையிலான பேதுருவின் ஏற்ற, இறக்கங்கள் கொண்ட வாழ்வு பற்றி நாம் விதவிதமான கோணங்களில் பார்த்துப் பேசவும், எழுதவும் முடியும். ஆனால், திருமதி பேதுரு பற்றி நேரிடையாக எந்தத் தடயமும் இல்லையே என்று நீங்கள் எண்ணுவது எனக்குப் புரிகிறது. எதற்கும் முயற்சித்துப் பார்க்கலாம், வாருங்கள்.

திருமதி. பேதுரு, அப்போஸ்தலன் பேதுருவுக்கு **வெகுமதியாக** கர்த்தரால் கொடுக்கப்பட்டவள். எப்படியெனில், ... புத்தியுள்ள **மனைவி கர்த்தர் அருளும் ஈவு** என்று (நீதி . 19:14). ஞானி சாலமோன் மூலம் நாம் அறிய முடியும். **ஈவு** என்பதும் **வெகுமதி** என்பதும் ஒன்று தான். நம் தாய்மொழித் தமிழில் திருமதி என்பது ஓர் அழகு

சொல். **திரு, திருமதி** போன்றவைகள் மரியாதைக்கான சிறப்பு வார்த்தைகள். எப்படியெனில், இளம்பிள்ளைகளாக இருக்கும் போது **செல்வன், செல்வி** என்று சொல்லப்படுபவர்கள், வாலிபத்தை அடையும் போது **குமரன், குமரி** என்ற அழைக்கப் படுகிறார்கள். அவர்கள் வாழ்வின் அடுத்த நிலையாகிய திருமண பந்தத்தில் இணையும் போது, **திரு** மற்றும் **திருமதி** ஆக மாறி விடுகிறார்கள்.

**திரு** என்னும் தமிழ்ச் சொல்லுக்கு ஒன்றுக்கும் மேற்பட்ட பொருள்கள் உண்டு. அவைகளுள் **சிறந்த, தேர்ந்த** என்பவை களும் அடக்கம். அதாவது, அன்பில், ஆற்றலில், பண்பில், பக்குவத்தில் **திரு** ஆக இருக்கும் ஒருவன் தேர்ந்தவனாக, சிறந்தவனாக இருப்பான் என்பதே அதற்கான விளக்கப் பொருள். நடைமுறையில் **திரு** என்பவர் இப்படியா இருக்கிறார் என்ற கேள்வி எல்லாம் வேண்டாம். இப்படி இருக்கவேண்டுமென்பது காலங்காலமான தமிழ்ச் சமுதாய எதிர்பார்ப்பு. சரியா?

சரி, எப்படியோ இது ஓரளவு புரிகிறது. ஆனால், பெண்களை **திருமதி** என்று அழைப்பது எப்படி என்று கேட்கிறீர்கள். அப்படித்தானே. **திருமதி** என்பது ஒரு கூட்டு வார்த்தை **திரு** + **மதி** = **திருமதி.** ஆண்களுக்குரிய **திரு**வுடன் **மதி** பெண்களோடு சேர்க்கப்பட்டிருக்கிறது. **மதி** என்றால் **அறிவு** / **புத்தி** என்று பொருள்படும். இங்கே ஆண்களுக்கு இருக்கவேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகின்ற சிறப்புப் பண்புகளோடு, பெண்களுக்கு **மதி** கூடச் சேர்க்கப்பட்டிருக்கிறது. இதற்கு வசன ஆதாரம் கேட்டு விடாதீர்கள். சொல்லார்த்த ரீதியில் நம் மொழி சார்ந்த விளக்கம் இது. அவ்வளவே! பலமும், துணிவும், செயல்திறனும் ஆண்களுக்கு உரித்தானவைகளாக இருக்கும் நிலையில் அவர்களுக்குச் சறுக்கலும், தோல்வியும் ஏற்படுகிற வேளையில், **மதி நுட்பத்தோடு** காரியங்களை அணுகி தடம் புரண்டதை மீண்டும் எடுத்து நிறுத்தும் ஆற்றல் பெண்களுக்கு இருக்கக் கூடுமோ? **மதி** க்கு அது தான் காரணமோ?

பரிசுத்த வேதாகமத்திலும் இப்படி மதி நுட்பத்தோடு செயல்பட்ட பல பெண்களைக் காண முடிகிறதே. அபிகாயில் **மகா புத்திசாலி** என்று நம்மால் வாசிக்க முடியும் (I சாமு:15:23). மோசேயின் மனைவி **சிப்போராளின் மதிநுட்ப செயல்பாட்டை** யாத்திராகமம் 4:24-26 வசனங்களில் நாம் கவனிக்க முடியும். இன்னும், கேனியனான ஏபேரின் மனைவி **யகேலின் சாதுரியத்தையும்** (நியா: 5:25), மனோவா, மனைவியின் **சமயோசிதத்தையும்** (நியா: 13:19,23) நாம் வாசித்து அறிய முடியும். மேலும், புதிய ஏற்பாட்டுப் பிரிஸ்கில்லாளையும் இந்த வரிசையில்

சேர்க்க முடியும். எப்படியெனில், ஆரம்பதில் ஆக்கில்லா, பிரிஸ் கில்லா என்று அழைக்கப்பட்டவர்கள் (அப்:18:26), பின்னாளில் பிரிஸ்கில்லா, ஆக்கில்லா என்று குறிப்பிடப்பட்டிருக்கிறார்கள் (ரோமர்:16:3; II தீமோத் 4:19). நாம் இங்கே விவாதிப்பது போல பக்திவாழ்வில் அவளுடைய மதி நட்ப செயல்பாடு இதற்கு காரணமாக இருந்திருக்குமோ? ஆவியானவர் காரணமில்லாமல் இப்படி எழுத அனுமதித்திருக்கமாட்டார் தானே.

ஒரு வேளை திருமதி. பேதுருவின் செயல்பாடு, வேதாக மத்தில் நேரிடையாகக் குறிப்பிடப்பட்டிருக்கும் இவர்களைப் போன்று இல்லாவிட்டாலும், சில சிறப்புத் தகுதியம்சங்கள் இவளுக்கு இருந்திருக்க வேண்டுமென்றே தெரிகிறது. அது பற்றி நாம் கிட்டப் போய்ப் பார்ப்பதற்கு முன், நமது வழக்கத்தின் படி இதற்கு தேவையான சில பின்னணித் தகவல்களைச் சேகரிப்போம்.

புதிய ஏற்பாட்டின் முதல் மூன்று நற்செய்தியாளர்களும், திருமதி. பேதுரு பற்றி எதுவும் குறிப்பிடாவிட்டாலும், பேதுருவின் மாமி, சுகவீனமாய் இருந்தது பற்றியும், இயேசு அவள் ஜுரம் நீங்கக் கட்டளையிட்டது பற்றியும் உடனே அவள் எழுந்திருந்து அவர்களுக்குப் பணிவிடை செய்தாள் என்பது பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார்கள் (மத்: 8:14; மாற்கு.1:30; லூக்கா. 4:38), இவர்களிடமிருந்து நமக்கு உறுதிபடக், கிடைக்கும், தகவல் பேதுரு திருமணமானவர் என்பது.

சரி, மத்தேயு ஆசிரியரின் கூற்றுப்படி, இயேசு ஆண்டவர் புகழ்மிக்க மலைப் பிரசங்கத்தை முடித்த கையோடு கப்பர் நகூம் பட்டணத்துக்குச் சென்றிருக்கிறார் என்று தெரிகிறது (மத்:8:5). இப்பட்டணம் கலிலேயாக் கடலைச் சுற்றியிருந்த பட்டணங்களில் ஒன்று. குறிப்பாக, இயேசுவால் தெரிந்த கொள்ளப்பட்ட யோவான், யாக்கோபு, பேதுரு, அந்திரேயா போன்றவர்களுக்கு இது சொந் ஊர். ஊழியத்தின் பாதையில் இது இயேசுவின் பட்டணமாகவும் மாறிவிட்டது (மத் 4:13;9:1; 17:24). இப்பட்டணத்தில் தான் பேதுருவுக்கும், அந்திரேயாவுக்கும் சொந்தமான வீடு இருந்தது. அண்ணன், தம்பி இவரும் ஒரே வீட்டில் குடியிருந்திருக் கிறார்கள் (மாற்கு 1:29) நம்முடைய கலாச்சாரத்தின் ஓர் அங்கமாக புதிய ஏற்பாடு இருக்கிறபடியால், இதைப்புரிந்து கொள்வதில் நமக்குத் பெரிதாக சிரமம் இல்லை.

இயேசு பேதுரு, அந்திரேயா வீட்டிற்குச் சென்ற போது யோவான், யாக்கோபு உடன் சென்றுள்ளனர். இந்த வீடு பிறரை ஏற்று உபசரிக்கும் ஒரு வீடாக இருந்திருப்பது போல் தெரிகிறது.

அங்கே பேதுவின் மாமி சுகவீனம் பற்றி இயேசு அறிந்து, அவர் பரம வைத்தியராக இருக்கிறபடியால் உடனடியாக சுகம் தந்தார். அவள் அவர்களுக்குப் பணிவிடை செய்தாள் என்று வாசிக்கிறோம் (மாற்கு 1:31). ஓர் இயேசுவுக்கு பணிவிடை செய்யவே பெத்தானியா மார்த்தாளுக்கு மரியாளின் உதவி தேவைப் பட்டிருக்கும் போது (லூக்.10:40), இயேசுவோடு சென்ற ஒரு கும்பலுக்கு பேதுருவின் மாமி மட்டும் பணிவிடை செய்திருக்க முடியாது. அப்படியானால், உபசரிக்கும் குணம் கொண்ட அவ்வீட்டுப் பெண்கள் எல்லாரும், திருமதி. பேதுரு உட்பட அதில் ஈடுபட்டிருக்க வேண்டும். அப்படித் தானே!

இவை தவிர திருமதி. பேதுரு பற்றிய நேரிடையான தடயம் I கொரி 9:5-ல் நமக்குத் கிடைக்கிறது. **மற்ற அப்போஸ்தலரும், கர்த்தருடைய சகோதரரும், கேபாவும் செய்கிறதுபோல, மனைவியாகிய ஒரு சகோதரியைக் கூட்டிக் கொண்டு திரிய எங்களுக்கும் அதிகார மில்லையா?** கேபாவாகிய பேதுரு திருமணமானவர் என்பதற்கு இதைவிட வேறு சான்று தேவையில்லை. பேதுரு போல வேறு சில அப்போஸ்தலரும் திருமணம் ஆனவர்களாகவே இருந்து ள்ளனர். இப்பகுதியில், அப்போஸ்தலன் பவுல், தன் அப்போஸ்தலத்துவத்தைக் கேள்வி கேட்பவர்களுக்குப் பதில் தருகிறார். இப்பதிலில் நமக்கு சில கூடுதல் தகவல்களும் கிடைக்கிறது. அது கர்த்தருடைய ஊழியத்தை செய்பவர்களை சபையானது தாங்க வேண்டுமென்பது. மற்ற அப்போஸ்தலரும், கர்த்தருடைய சகோதரரும், கேபாவும் தங்கள் மனைவிகளோடு ஊழியத்தினிமித்தம் எங்கெல்லாம் சென்றார்களோ அங்கெல்லாம் அவர்களுக்கு உதவி கிடைத்திருக்கிறதாகவே தெரிகிறது. பர்னபாவும், பவுலும் இந்நிலைக்கு விதிவிலக்காகக் கைத்தொழில் செய்து ஊழியம் செய்திருந்தாலும், ஊழியத்தினிமித்தம் உதவி பெறுவது நியாயப்படுத்தப்பட்டுள்ளது. ஏனெனில், சுவிசேஷத்தை அறிவிக் கிறவர்களுக்குச் சுவிசேஷத்தினாலே பிழைப்பு உண்டாக வேண்டுமென்று கர்த்தரின் கட்டளையாக உள்ளது (Iகொரி:9:14).

இப்பின்னணித் தகவல்களையும், வேறு சில வசனப்பகுதிகளையும் கொண்டு திருமதி.பேதுரு மூலமாக நமக்குக் கிடைக்கும் பாடங்கள் என்னவென்று பார்ப்போம்.

## I. திருமதி. பேதுரு மூப்பரின் மனைவியாயிருந்தாள்

திருமதி. பேதுரு மூலமாக நமக்குக் கிடைக்கும் முதல் பாடம், சபைப் பொறுப்பிலுள்ளவர்களின் மனைவிமார்கள் சபைக்கு எப்போதும் பக்கபலமாக இருக்க வேண்டும் என்பது.

பேதுருவுக்கு மனைவி இருந்தாள் என்பதற்கான அசைக்க முடியாத ஆதாரங்களில் மேலும், ஒன்று அவன் கர்த்தருடைய சபையின் மூப்பர்களில் ஒருவராக இருந்தார் என்பது. **உங்களிலுள்ள மூப்பருக்கு உடன் மூப்பர்** என்று கூறுகிறார். [I பேதுரு 5:1]. மூப்பருக்கான தகுதிகள் I தீமோத்தேயுவிலும், தீத்துவிலும் பட்டியலிடப்பட்டிருக்கிறது. குற்றம்சாட்டப்படா தவன், ஒரே மனைவியை உடைய புருஷன், ஜாக்கிரதை உள்ளவன், தெளிந்த புத்தியுள்ளவன், யோக்கியதை உள்ளவன், **அந்நியரை உபசரிக்கிறவன்,** போதகசமர்த்தன், தன் இஷ்டப்படி செய்யாதவன். முற்கோபமில்லாதவன், அடியாதவன், இழிவான ஆதாயத்தை இச்சியாதவன், **சண்டை பண்ணாதவன்,** நல்லோர் மேல் பிரியமுள்ளவன், நீதிமான், பரிசுத்தவான், இச்சையடக்க முள்ளவன், ஆரோக்கியமான உபதேசத்தினால் புத்தி சொல்லு பவன், உண்மையான வசனத்தை நன்றாய் பற்றிக் கொள்ளு கிறவன், **தன் சொந்தக் குடும்பத்தை நன்றாய் நடத்துகிறவன். நல்லொழுக்கமுள்ள பிள்ளைகளை** உடையவன் என்று பட்டியலில் நீள்கிறது. [I தீமோ.3 மற்றும் தீத்து 1].

அதுசரி, இந்தப் பக்திப் பட்டியலுக்கும் திருமதி. பேதுருவுக்கும் என்ன சம்பந்தம் என்கிறீர்களா? நியாயந்தான். ஆனால், இப்பட்டியலை உங்கள் கண்களை அகலவிரித்து மீண்டும் ஒரு முறை படியுங்கள். அதிலுள்ள அந்நியரை உபசரிக் கிறவன், சண்டை பண்ணாதவன், தன் சொந்த குடும்பத்தை நன்றாய் நடத்துகிறவன். பிள்ளைகளை நல்லொழுக்கத்தில் வளர்ப்பவன் ஆகிய இவைகள் ஒரு மனைவியின் ஒத்துழைப் பில்லாமல் குடும்பத்தில் சாத்தியம் என்று எண்ணுகிறீர்களா? வாய்ப்பே இல்லை. அப்படி ஏதாவது குறைகள் இருந்திருக்கு மானால் ஆதிச்சபையின் மூப்பர்களில் ஒருவராக இருந்திருக்க முடியுமா? சபையார் விட்டிருப்பார்களா? குற்றம் சாட்டி வெளி யேற்றியிருக்க மாட்டார்கள்? ஒரு வேளை அவர்கள் தான் சில வற்றை சகித்திருந்தாலும் ஆதிச்சபையயில் தேவன் இப்படிப்பட்ட ஒழுங்கீனத்தை அனுமதித்திருப்பாரா? சான்சே இல்லை.

அப்படியானால் என்ன தெரிகிறது? தேவன் தனக்குக் கொடுத்த மாபெரும் மூப்பர் பொறுப்பை நிறைவேற்றுவதற்கு திருமதி. பேதுரு உற்றதுணையாய் இருந்துள்ளாள். சில உறுப்பினர் உள்ள ஒரு குடும்பத்தை சச்சரவு இல்லாமல் நடத்துவதே கடும்சவாலாக இருக்கும்போது, அதிகமான அங்கத்தினர்களைக் கொண்ட சபையை தேவனுக்குப் பிரியமாக நடத்துவது என்ன இலேசானதா? திருமதி. பேதுருவின் அடக்கமும், சாந்தமும், சாதுரியமும், உபசரிப்பும், கண்டிப்பும் பேதுருவுக்கு எல்லாவகையிலும் கைகொடுத்துள்ளது.

ஆகவேதான், I பேதுரு 3:1-6, வசனப்பகுதியில், மனைவிமார்கள் எப்படிப்பட்ட நடக்கையுள்ளவர்களாக இருக்க வேண்டும், எது தேவனுடைய பார்வையில் **விலையேறப்** பெற்றது என்று திருவாளர். பேதுரு நெஞ்சை நிமிர்த்தி எழுத பரிசுத்த ஆவியானவர் அனுமதி கொடுத்துள்ளார். ஆகவே திருமதி பேதுருவை ஒரு சிறந்த முன்னுதாரணமாக எடுத்து பக்தி வாழ்வை அமைத்து ஊழியக் காரியங்களைத் தாங்குவது நல்லது.

### II. திருமதி. பேதுரு உபசரிக்கும் மனைவியாயிருந்தாள்

திருமதி. பேதுரு மூலமாக நமக்குக் கிடைக்கும் இரண்டாம் பாடம், மனைவிமார்கள் விருந்தோம்பல் உள்ளவர்களாக இருக்க வேண்டும் என்பது.

உபசரித்தல் அல்லது விருந்தோம்பல் என்பது இயேசுவின் சீடர்களுக்கு இருக்க வேண்டிய அடிப்படைப் பண்புகளுள் ஒன்று. விருந்தினர்களையும், அந்நியரையும் முகமலர்ச்சியோடு வரவேற்று, அவர்களின் தேவைகளை மனதாரப் பூர்த்தி செய்வது தான் விருந்தோம்பல். மத்தேயு இருபத்தைந்தாம் அதிகாரத்தின் நியாயத்தீர்ப்புக் காட்சியில், வலது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து.... பசியாயிருந்தேன், எனக்குப் போஜனம் கொடுத்தீர்கள், தாகமாயிருந்தேன் என் தாகத்தைத் தீர்த்தீர்கள், அந்நியனாயிருந்தேன், என்னைச் சேர்த்துக் கொண்டீர்கள் என்றார் (மத். 25:35). இன்றும், பவுலடியார், ரோமாரியாருக்கு எழுதும் போது, பரிசுத்தவான்களுடைய குறைவில் அவர்களுக்கு உதவி செய்யுங்கள்; அந்நியரை உபசரிக்க நாடுங்கள். இது கிறிஸ்தவர்களுக்கான கட்டளை.

அந்நியரை உபசரிப்பது (I தீமோ3:தீத்து 1) மூப்பர்களுக்கான தகுதிகளில் ஒன்றாக இருக்கிறபடியால், ஆதிச்சபையின் ஒருவராக இருந்த பேதுரு, இச்செயலில் குறையற்றிருந்ததற்கு அவன் மனைவியின் செயல் மிக முக்கியமானதாக இருந்திருக்க வேண்டும். தீமோத்தேயு பற்றி, அந்த விசுவாசம் உன் பாட்டியாகிய லோவிசாளுக்குள்ளும், தாயாகிய ஐனிக்கேயாளுக்குள்ளும் இருந்தது என்று சொல்வது போல், திருமதி. பேதுருவுக்குள்ளாக அந்த உபசரிக்கும் குணம் அவள் தாயாரிடத்திலிருந்து வந்திருக்க வேண்டும். எப்படியெனில், திருமதி பேதுருவின் தாய் ஜூரம் நீங்கி சுகம் பெற்றவுடன், எழுந்து பணிவிடை செய்திருக்கிறாள். இப்படிப்பட்ட பெண்களே இன்றைக்குக் குடும்பத்திலும், சபையிலும் தேவை. இப்படிப்பட்ட குணத்தின் மூலமாக ஆபிரகாம், லோத்து போன்றவர்கள் தேவதூதரைக்கூட உபசரித்திருக்கிறார்கள். (ஆதி: 18:118; 19:1-11) உபசரிக்கும் குணத்தில்

திருமதி. பேதுரு தோற்றுப் போயிருந்தால், திருவாளர் பேதுரு ஒரு வெற்றிகரமான மூப்பராக இருந்து ஆதிச்சபையை வழிநடத்தியிருக்க முடியாது.

அருமையானவர்களே, கிறிஸ்தவத்தில் உபசரிக்கும் குணம் எந்தளவில் உள்ளது? எந்தளவில் உள்ளது என்பதை விட, எங்காவது உள்ளதா என்று கேட்க வேண்டிய நிலையே காணப்படுகிறது. எபிரெயர் ஆசிரியர் கூறும்போது அந்நியரை உபசரிக்க மறவாதிருங்கள் என்ற கூறுகிறார் [எபி.13:2] அந்நியர் என்றால் அறிமுகம் இல்லாதவர்கள். சொந்தக் குடும்பத்தில் உள்ளவர்கள், சொந்தக் குடும்பத்திற்குச் சம்பந்தமானவர்களின் நிலையே, குறிப்பாக, குடும்பத்தில் உள்ள முதியார்களின் நிலையே பரிதாபத்திற்கு உரியதாக இருக்கும்போது அந்நியரைப் பற்றி பேசுகிறீர்களே என்று முகம் சுளிக்கிறீர்களா? உண்மை தான். தங்களைப் பக்தியுள்ளவர்கள் என்று பீற்றிக் கொள்ளும் அநேகர் இக்காரியத்தில் புத்தியில்லாதவர்களாகவே உள்ளனர். யாக்கோபு ஆசிரியரின் வசனம் நம் காதுகளில் எப்போதும் ரீங்காரமிடுவது நல்லது. **நியாயப்பிரமாணம் முழுவதையும் கைக்கொண்டிருந்தம், ஒன்றிலே தவறினால் எல்லாவற்றிலும் குற்றவாளியாயிருப்பான்** [யாக் 2:10] என்பது.

ஆகவே, திருமதி. பேதுரு போல உபசரிக்கும் குணம் கொண்டு ஊழியத்தையும், நம் ஆத்துமாவையும் காப்பாற்றி நித்திய பாக்கியத்தை உறுதி செய்வோம்!

## III. திருமதி. பேதுரு ஊழியப் பணியில் துணை நின்றாள்

திருமதி. பேதுரு மூலமாக நம்மால் அறிந்து கொள்ள முடிகின்ற இன்னொரு பாடம், மனைவிமார்கள் ஊழியப் பணியை ஊக்குவிக்கிறவர்களாக இருக்க வேண்டுமென்பது.

ஊக்குவிப்பு என்பதின் பொருள் நம்பிக்கையளிப்பது, பணியில் மேம்பட உதவுவது, சோர்வில் பெலப்படுத்துவது. திருவாளர் பேதுருவின் தோளின் மீது இரண்டு பாரங்கள் சுமத்தப்பட்டிருந்தது. 1. ஊழியப் பணி 2. மூப்பர் பணி. ஊழியப்பணி கிறிஸ்துவின் **பிரதான கட்டளையாகக்** கொடுக்கப்பட்டிருந்தது. மூப்பர் பணி **கிறிஸ்துவின் சபையால்** அவர் மீது ஏற்றப்பட்டிருந்தது. ஊழியத்தின் பாதையில் அவர் சந்தித்த சவால்கள், அச்சுறுத்தல்கள் அதிகம் [அப்.4:3; 5:40; 12:3]. மூப்பர் பணியும் சாதாரணமானது அல்ல. முறுமுறுப்பு என்பது பழைய ஏற்பாட்டு இஸ்ரவேலுக்கு மட்டும் சொந்தமானது என்று எண்ண வேண்டாம். புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவர்களுக்குள்ளும்

இது தொடர்ந்தது (அப் .6:1). முறுமுறுப்பவர்களைக் கையாள்வது பொதுவாக கடினமான காரியம். எதிர்ப்பவர்களை விட இவர்கள் மோசமானவர்கள். பேதுரு இந்த இரண்டு பணிகளையும் வெற்றிகரமாகச் செய்துள்ளான்.

திருமதி. பேதுரு ஊக்குவிப்பவராக இருந்திருக்காவிட்டால், பேதுரு கண்டிப்பாக தேவனுக்குப் பிரியமான முறையில் காரியங்களைச் செய்திருக்க முடியாது. ஆகவே, ஊழியச் சிந்தையும், ஊழிய வஞ்சனையும், ஆத்தும பாரமும், சகிப்புத் தன்மையும் திருமதி. பேதுருவுக்கு இருக்கவே இருந்துள்ளது.

பவுலடியார் கொரிந்தியருக்கு எழுதும் போது, மனைவியாகிய ஒரு சகோதரியைக் **கூட்டிக் கொண்டு திரிய** என்கிறார் (I கொரி 9:5). பேதுரு சென்ற இடங்களுக்கெல்லாம் திருமதி. பேதுருவும் ஈடுகொடுத்துச் சென்றுள்ளாள். இதே பேதுரு, I பேதுரு. 3:7–ல் **பெண்கள் பெலவீன பாண்டம்** என்கிறார். பெலவீன பாண்ட மாகிய இந்த திருமதி, பேதுரு **அலைந்து திரிந்த** இடங்களுக் கெல்லாம் சென்றுள்ளாள். அந்நாட்களில் பயணங்கள் எப்படி யிருந்திருக்குமென்று கற்பனை செய்து பாருங்கள். ஆயினும், இந்தத் திருமதி சௌகரியத்தைப் பற்றிக் கவலைப்படாமல் கூடச் சுற்றி, பேதுருவை ஊழியத்தில் ஊக்கப்படுத்தியுள்ளாளே!

அருமையானவர்களே! இன்றைய நாட்களின் நிலை என்ன? திருமதி பேதுரு ஓர் ஊக்குவிப்பாளராக, ஊழியப் பணியில் ஈடுபடுத்தினவளாக இருந்திருந்தால், அதற்கு அவளிடம் இருந்த வேத அறிவு காரணமாக இருந்திருக்க வேண்டும். வசனத்தை நிதானமாகப்பகுத்துப் போதிக்கிறவர்களாக இருக்க வேண்டும் (II தீமோ.2:15). இன்னும், பெரேயே பட்டணத்துக் கிறிஸ்தவர்கள் போல வேத வாக்கியங்களை ஆராய்கிறவர்களாக இருக்க வேண்டும் (அப்.17:11). திருமதி பேதுரு போன்ற ஊக்குவிப்பாளர்கள் இல்லாமல், எத்தனை ஊழியக்காரர்கள் வீணாகிப்போய், எத்தனை சபைகள் பாழாகியிருக்கும் தெரியுமா?

ஆக, ஊழியப் பணியில் துணை நிற்கும் சகோதரிகள், கர்த்தருடைய வேலைக்காரரின் மனைவிமார்கள், சபை யிலிருக்கும் பெண்கள் தங்கள் பொறுப்பையும், கடமையையும் உணர்ந்து செயல்படுவது நல்லது. நம்முடைய செயலுக்கான பலன் கிடைக்க வேண்டுமென்று ஆசைப்பட வேண்டாம். திருமதி. பேதுருவின் பெயர் வேதாகமத்தில் இல்லை. ஆனாலும், இந்தத் திருமதி பற்றி நாம் பேசுகிறோம். அதுபோல நீங்களும் பேசப்படுவீர்கள். தேவனுடைய கணக்கில் எல்லாமே இருக்கும். ஆகவே, பேதுரு மனைவிபோல இருக்கத் தீர்மானிப்போம்! ஆமென்!!

# *தேவனுடைய வார்த்தையின் வல்லமை*

Bro. J.C. **சோட்**

**தே**வன் எல்லாக் காலங்களிலும் பேசியிருக்கிறார் [எபி.1:1,2], தேவன் தம்முடைய குமாரன் மூலமாகப் பேசியிருக்கிறார். [யோவான் 1:1,2; மத்தேயு 17:5], அவருடைய வார்த்தைகள் பாதுகாக்கப்பட்டு பரிசுத்த எழுத்துக்களை உள்ளடக்கிய வேதாகமத்தின் மூலமாக நமக்கு வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது [II தீமோ.3:16,17]. அந்த வார்த்தை வல்லமையுள்ளது [எபி.4:12]. நாம் அந்த வார்த்தைகளை விசுவாசித்து அதற்குக் கீழ்ப்படிந்தால், அது நம் வாழ்க்கையில் கிரியை செய்து ஆத்துமாவை இரட்சிக்கும் [ரோமர் 1:16,17].

சிருஷ்டிப்பின் ஆரம்பத்தில் தேவன் சொன்னவைகளையெல்லாம் நினைவில் வைத்திருக்கிறீர்களா? தேவன் வெளிச்சம் உண்டாகக்கடவது என்றார், வெளிச்சம் உண்டாயிற்று [ஆதி.1:3]. தொடர்ந்து வரும் வசனங்களில் தேவன் தம்முடைய வாயின் வார்த்தைகளினாலே ***உண்டாகக்கடவது*** என்றார். அவைகள் அப்படியே உண்டாயிற்று. ஆகையால், தேவனுடைய வார்த்தை வல்லமையால் நிறைந்திருக்கிறது. நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தேவனுக்காகப் பேசும்படி வந்தார். அதனால் தான் ***வார்த்தை*** என்றழைக்கப்படுகிறார் [யோவான் 1:1]. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் தமது ஊழிய நாட்களில் இவ்விதம் விளம்பியுள்ளார். யோவான் 7:16-18 ம் வசனங்களில், இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக என் உபதேசம் என்னுடையதாயிராமல், என்னை அனுப்பினவருடையதாயிருக்கிறது. அவருடைய சித்தத்தின்படி செய்ய மனதுள்ளவனெவனோ அவன் இந்த உபதேசம் தேவனால் உண்டாயிருக்கிறதோ, நான் சுயமாய்ப் பேசுகிறேனோ என்று அறிந்துகொள்ளுவான். சுயமாய்ப் பேசுகிறவன் தன் சுய மகிமையைத் தேடுகிறான். தன்னை அனுப்பினவரின் மகிமையைத் தேடுகிறவனோ உண்மையுள்ளவனாயிருக்கிறான், அவனிடத்தில் அநீதியில்லை.

தேவன் எல்லாக் காலங்களிலும் பேசியிருக்கிறார் [எபி.1:1,2], தேவன் தம்முடைய குமாரன் மூலமாகப் பேசியிருக்கிறார் யோவான் 1:1,2; மத்தேயு 17:5], அவருடைய வார்த்தைகள் பாதுகாக்கப்பட்டு பரிசுத்த எழுத்துக்களை உள்ளடக்கிய

வேதாகமத்தின் மூலமாக நமக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது [II தீமோ.3:16,17], அந்த வார்த்தை வல்லமையுள்ளது [எபி.4:12]. நாம் அந்த வார்த்தைகளை விசுவாசித்து அதற்குக் கீழ்ப்படிந்தால், அது நம் வாழ்க்கையில் கிரியை செய்து ஆத்துமாவை இரட்சிக்கும் [ரோமர் 1:16,17].

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அதிகாரமுடையவராகப் பேசினார் [மத்.7:29]. அவரை விமர்சித்தவர்கள் அவருடைய கேள்விகளுக்குப் பதிலளிக்க முடியவில்லை. இதினிமித்தம் வசனமே எப்போதும் வென்றிருக்கிறது. அதனால் தான், கிறிஸ்துவானவர் நானே வழியும் சத்தியமும் ஜீவனுமா யிருக்கிறேன் என்றார் [யோவான் 14:6]. அவர் பேசினபோது குருடர்கள் பார்வையடைந்தார்கள், ஊமைகள் பேசினார்கள், செவிடர்கள் கேட்டார்கள், சப்பாணிகள் நடந்தார்கள், வியாதி யஸ்தர் சுகமடைந்தார்கள், மரித்துப் போனவர்கள் உயிரோடு எழுப்பப்பட்டார்கள். அவர் கடலைப் பார்த்துப் பேசினபோது கொந்தளித்த கடல் அமர்ந்தது, பிசாசுகள் ஓடின, தண்ணீர் திராட்சரசமாக மாறியது, திரளான ஜனங்கள் சாப்பிட்டுத் திருப்தியா னார்கள். ஆகையால், கர்த்தருடைய வார்த்தை வல்லமையான விளைவுகளை ஏற்படுத்த ஒருபோதும் தவறியதில்லை.

இயேசு கிறிஸ்து சொன்னவைகள், செய்தவைகள் எல்லாம் வேதாகமத்தில் எழுதித் தரப்பட்டுள்ளது. இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நாம் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும்படியாகவும் இவைகள் எழுதப்பட்டிருக்கிறது [யோவான் 20:30,31]. நாம் கிறிஸ்துவின் வார்த்தைகளைப் படிப்பதினாலும், விசுவாசிப்பதினாலும் [மத்.17:5; II தீமோ. 2:15] விசுவாசம் உண்டாகிறது [ரோமர் 10:17]. நாம் அவ்வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிவதின் மூலமாக இரட்சிக்கப்படுகிறோம் [மாற்கு 16:15,16]. ஆகையால் நீங்கள் மாயமற்ற சகோதர சிநேகமுள்ளவர் களாகும்படி, ஆவியினாலே சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து, உங்கள் ஆத்துமாக்களைச் சுத்தமாக்கிக் கொண்டவர்களாயிருக்கும் படியாய், சுத்த இருதயத்தோடே ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்பு கூருங்கள்; அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென் றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவவசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக் கிறீர்களே. அவ்விசுவாசம் விருத்தியடைந்து செயலை விளைவிக்கிறது. நிறைவாக அது

ஆத்தும இரட்சிப்பைக் கொடுக்கிறது. ரோமர் 1:16–ல் விசுவாசிக் கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவபெலனாயிருக்கிறது என்று காண்கிறோம். ஆம், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும், பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே **பரலோக ராஜ்யத்தில்** பிரவேசிப்பான் என்று தீர்க்கமாகச் சொல்லிவிட்டார் (மத்.7:21).

ஆகையால், தேவ வார்த்தை உங்கள் வாழ்க்கையில் கிரியை செய்து உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்கும். மேலும், தேவனுடைய வார்த்தை உங்கள் வாழ்க்கையை வழிநடத்த நீங்கள் அனுமதிக்கும் போது அது உங்களுக்குப் பரலோகத்தில் நித்திய வாழ்வைக் கொடுக்கும். இன்னுமாக, தேவனுடைய வார்த்தை உங்கள் வாழ்க்கையில் கிரியை செய்யும்போது நீங்கள் கர்த்தருக்குள் உண்மையாயிருக்கச் செய்வதோடு தேவ சாயலிலும், அவருடைய குமாரனும் நம்முடைய இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் சாயலிலும் வளர உதவி செய்யும். ஆம், நாமெல்லாரும் திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறது போலக் கண்டு, ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம் (II கொரி. 3:18). இங்கே, நாம் பார்க்கும் கண்ணாடியானது தேவனுடைய வார்த்தைதான், தேவன் தம்முடைய வார்த்தையின் மூலமாக தம்மை நமக்கு வெளிப்படுத்துகிறார். ஆகையால், நாம் எதைக் காண்கிறோமோ அதை அப்படியே பிரதிபலித்து (பின்பற்றி) தேவசாயலில் வளர்ந்து விருத்தியடைவோம்.

மேலும், சுயாதீனப்பிரமாணமாகிய பூரணப்பிரமாணத்தை உற்றுப் பார்த்து, அதிலே நிலைத்திருக்கிறவனே கேட்கிறதை மறக்கிறவனாயிராமல், அதற்கேற்ற கிரியை செய்கிறவனா யிருந்து, தன் செய்கையில் பாக்கியவானாயிருப்பான் (யாக்.1:25). சுயாதீனப்பிரமாணமாகிய பூரணப்பிரமாணத்தை நாம் சற்று நெருக்கமாகப் பார்க்கும்போது, அது உங்களுக்குப் பெலனையும், வைராக்கியத்தையும், தீர்மானத்தையும் தந்து, உங்கள் வாழ்க்கையில் தேவைப்படும் எல்லா ஆவிக்குரிய மற்றும் சரீரப்பிரகாரமான ஆசீர்வாதங்களைக் கொடுக்கும். இறுதியில் அதுதான் உங்களை நியாயந்தீர்க்கும். யோவான் 12:48, என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிற தொன்றிருக்கிறது; நான் சொன்ன வசனமே அவனைக் கடைசி நாளில் நியாயந்தீர்க்கும்.

ஆகையால், இத்தகைய வல்லமையைப் பெற்றுக்கொள்ள பெரும்பாலானோர் சத்தியமில்லாத இடத்திற்குச் செல்வது மிகவும் வேதனைக்குரியது. இது மனிதனிடத்திலோ அல்லது அவனுடைய போதனையினிடத்திலோ காணமுடியாது. மாறாக, இந்த வல்லமை தேவனிடத்திலும் அவருடைய வார்த்தையிலும் இருக்கிறது என்பதை நாம் ஒரு போதும் மறந்து விடக் கூடாது. ஆம், விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதல் மூலமாக நமக்குள் கிரியை செய்கிறார். தேவனுடைய வார்த்தையின் வல்லமையானது நம்மை இரட்சித்து, நித்திய ஜீவனுக்குரிய நம்பிக்கையைத் தருகிறது. இவ்வல்லமையை விடப் பெரிதான வல்லமை உலகில் வேறு எதுவாக இருக்க முடியும்?

## மத்தேயு ஆசிரியர் பற்றி ...

- ஓர் ஆயக்காரன் [மத்.9:9: மாற்கு. 2:14]
- இயேசுவின் போதனையில் கவரப்பட்ட ஆயக்காரர்களில் ஒருவராக இருந்திருக்கலாம்.
- இயேசுவின் அழைப்பை ஏற்று எவ்விதத் தயக்கமும் இல்லாமல் அவரைப் பின்பற்றியவன் [லூக்கா.5:27,28]
- தன் தொழிலுக்காக ஓரளவு கல்வி கற்றவனாக இருந்திருக்க வேண்டும்.
- செல்வந்தனாக இருந்திருக்க வேண்டும். சொந்தமாக வீடு இருந்தது. [மத்.9:10-13].
- இயேசுவுக்கு விருந்து ஏற்பாடு செய்தான் [லூக்.5:29]
- கப்பர் நாகூமில் வாழ்ந்தான் [மத்:9:1-9].
- அல்பேயுவின் குமாரனாகிய லேவி என்றும் அழைக்கப்பட்டுள்ளான். [மாற்கு.2:14].

பெண்கள் பகுதி

# பரிசுத்த வேதாகமம்

Sis. ரேச்சல் இராஜநாயகம்

**கி**றிஸ்துவுக்குள் அருமையான சகோதரிகள் யாவருக்கும் ஸ்தோத்திரங்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். சுகமாயிருப்பீர்களென்று விசுவாசிக்கிறேன். கற்பனைகளைக் கைக்கொள்வதே நாம் அவரிடத்தில் காட்டும் அன்பு (I யோவான் 5:3). தேவனுடைய கற்பனைகள் யாவும் வேதாகமத்தில் இடம் பெற்றுள்ளது. எல்லாக் காலத்திலும் மனிதர் களாகிய நாம் கடைப்பிடிக்க வேதாகமத்தில் உள்ள வசனங்கள் நமக்கு போதுமானவைகளாக உள்ளது. (II தீமோ:3:16,17) – ல் வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டி ருக்கிறது. தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ்செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும் படியாக, அவைகள் உபதேசத்துக்குக்கும், கடித்து கொள்ளு தலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியை படிப்பிக்குதலுக்கும் பிரயோஜன முள்ளவைகளாயிருக்கிறது.

இந்த வசனத்தை நாம் விசுவாசித்தால் வேத வசனங்களின் அருமையும், மேன்மையும் தெரியும். தேவனை பிரியப்படுத்துவது, தேவ பக்தியாய் வாழ்வது, அப்படி வாழ்ந்து பரலோகத்திற்குச் சென்று அங்கு தேவனோடும், இயேசு கிறிஸ்துவோடும் இருப்பது பற்றியும் தெரிந்து, கொள்ள வேத வசனம் நமக்கு உதவி செய்கிறது. மட்டுமல்ல, நாம் செய்யும் பாவங்கள், தவறுகள் இவைகளை நமக்கு காட்டுகிறது. அதிலிருந்த மன்னிப்பு பெறவும், மனந்திரும்பவும் வழியை காட்டுகிறது.

எனவே தான், பரிசுத்த வேதாகமம், அதாவத தேவன் நமக்காக பேசின வார்த்தைகளை உள்ளடக்கிய ஒரு பொக்கிஷமாக இருக்கிறது. இதைப் பற்றிய விபரங்களை நாம் முன்னமே அறிந்தி ருந்தாலும் இம்மாதம் மீண்டும் பார்த்தோமானால் அது நமக்கு பயனுள்ளதாக இருக்கும்.

தேவன் நம்மிடம் எதை செய்யும்படி எதிர்பார்க்கிறாரோ அதின்படி செய்யாமலும், சொல்லாமலும் இருந்தால் அது பாவம். நியாயப்பிரமாணத்தை மீறுகிறதே பாவம் (I யோவான் 3:4). தேவனுடைய பார்வையில் எது சரி, அல்லது எது நன்மையானது என்பதையும், நாம் செய்யும் தவறுகளையும் அல்லது பாவங் களையும் சரி செய்து கொள்வது எப்படி என்பதையும் வேதாகமம் நமக்குப் போதிக்கிறது.

எபிரேயர் 1:1: வாசிக்கவும் பூர்வ காலங்களில் தேவன் தம் சித்தத்தை குடும்பத்தின் தலைவர்களுக்கு [பிதாக்கள்] வெளிப்படுத்தினார். [ ஆதி : 12 : 26,28]. இந்தத் தலைவர்கள் அல்லது தகப்பன்கள் முற்பிதாக்கள் என்று அழைக்கப்பட்டனர். பின்பு தேவன் மோசே போன்ற பரிசுத்த தீர்க்கதரிசிகள் மூலமாக தம் சித்தத்தை வெளிப்படுத்தினார்.

**உபாகமம் :31:24-26; எரேமியா :1:9 வாசிக்கவும்.**

யோவான் 14 :26, 16,13: வாசிக்கவும். மூன்று காரியங்களை செய்வதற்காக, இயேசு கிறிஸ்து பரிசுத்த ஆவியை தன் அப்போஸ்தலர்களுக்கு அனுப்பினார்.

* இயேசு தங்களோடிருந்த போது சொன்ன காரியங்களை நினைவுபடுத்த உதவும்படியாக அனுப்பினார்
* தன்னுடைய வார்த்தைகளை சத்தியத்தை யோவான் 17:17] கொடுக்கும் படியாக அனுப்பினார். எனவே, அவர்கள் தேவனுடைய சித்தத்தை பேசவும், எழுதவும் முடிந்தது.
* வரப்போகிறவைகளைப் பற்றியும், எதிர்காலத்தில் நடக்கப் போகிறவைகளைப் பற்றியும் அவர்களுக்கு கூறும் படியாகவும் பரிசுத்த ஆவி அனுப்பப்பட்டது.

வேதாகமம், 40 வேறுபட்ட பின்னணிகளையும், தொழில்களையும் கொண்ட மனிதர்களால் எழுதப்பட்டது. 1500 வருடங்களுக்கு மேலாக இதை எழுத காலம் தேவைப்பட்டது. வேதாகமத்தில் 66 புத்தகங்கள் உள்ளன.

வோகமத்தைப் பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு என்று இரண்டு பெரும் பிரிவுகளாக பிரிக்கலாம். பழைய ஏற்பாடு 39 புத்தகங்களை உள்ளடக்கியுள்ளது. இது ஆரம்ப உலகத்தைப் பற்றியும், தேவனுடைய விசேஷ ஜனங்களை தெரிந்தெடுத்தல் பற்றியும், மோசேயின் நியாயப்பிரமாணம் கொடுத்தல் பற்றியும், இஸ்ரவேல் ஜனங்களின் சரித்திரம் பற்றியும், வரப்போகிற இரட்சகரைப்பற்றி முன் உரைத்தல் பற்றியும் பேசுகிறது

புதிய ஏற்பாடு 27 புத்தகங்களை உள்ளடக்கியுள்ளது. இயேசுகிறிஸ்து பூமியில் இருந்த போது அவருடைய வாழ்க்கை, போதனைகள் பற்றியும், கிறிஸ்துவின் சபை உருவானதைப் பற்றியும், கிறிஸ்தவனாக ஒருவன் எப்படி வாழ்வது என்பது பற்றியும் போதிக்கிறது.

பழைய ஏற்பாடு 5 பாகங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. சட்டப்புத்தகம், சரித்திரம், பாடல், பெரிய தீர்க்கதரிசனம், சிறிய

தீர்க்கதரிசனம் என்பவை

புதிய ஏற்பாடு.
சுவிசேஷம், சரித்திரம், நிருபங்கள், வெளிப்படுத்தின விசேஷம் என 4 பாகங்களாக பிரிக்கப்பட்டுள்ளது.

***பழைய ஏற்பாட்டில் உள்ள பிரிவுகள் புத்தக வாரியாக:***

**1. சட்டப்புத்தகங்கள்**

1. ஆதியாகமம்
2. யாத்திராகமம்
3. லேவியராகமம்
4. எண்ணாகமம்
5. உபாகமம்

**2. சரித்திரப் புத்தகங்கள்**

1. யோசுவா
2. நியாயாதிபதிகள்
3. ரூத்
4. I சாமுவேல்
5. II சாமுவேல்
6. I இராஜாக்கள்
7. II இராஜாக்கள்
8. I நாளாகமம்
9. II நாளாகமம்
10. எஸ்றா
11. நெகேமியா
12. எஸ்தர்

**3. பாடல் புத்தகங்கள்**

1. யோபு
2. சங்கீதம்
3. நீதிமொழிகள்
4. பிரசங்கி
5. உன்னதப்பாட்டு

**4. பெரிய தீர்க்கதரிசனம்**

1. ஏசாயா
2. எரேமியா
3. புலம்பல்
4. எசேக்கியேல்
5. தானியேல்

**5. சிறிய தீர்க்கதரிசனம்**

1. ஓசியா
2. யோவேல்
3. ஆமோஸ்
4. ஒபதியா
5. யோனா
6. மீகா
7. நாகூம்
8. ஆபகூக்
9. செப்பனியா
10. ஆகாய்
11. சகரியா
12. மல்கியா

***புதிய ஏற்பாட்டில் உள்ள பிரிவுகள் புத்தக வாரியாக:***

1. **சுவிசேஷம் -** 1. மத்தேயு, 2. மாற்கு, 3. லூக்கா, 4. யோவான்

2. **சரித்திரம் : -** 1. அப்போஸ்தலருடைய நடபடிகள்

3. **நிருபங்கள் : -** அப். பவுலினால் எழுதப்பட்ட நிருபங்கள்:

1. ரோமர்
2. I கொரிந்தியர்
3. II கொரிந்தியர்
4. கலாத்தியர்
5. எபேசியர்
6. பிலிப்பியர்
7. கொலோசெயர்
8. I தெசலோனிக்கேயர்
9. II தெசலோனிக்கேயர்
10. I தீமோத்தேயு
11. II தீமோத்தேயு
12. தீத்து
13. பிலேமோன்

ஆ. ஆசிரியர் பெயர் குறிப்பிடப்படவில்லை (அப் பவுல் என்று நம்பப்படுகிறது).

எபிரெயர்

இ. பொதுவான நிருபங்கள் :

1. யாக்கோபு
2. I பேதுரு
3. II பேதுரு
4. I யோவான்
5. II யோவான்
6. III யோவான்
7. யூதா.

ஈ. தீர்க்கதரிசனம்:

1. வெளிப்படுத்தின விசேஷம்

பிரியமானவர்களே! இந்த புறக்குறிப்புகள் பிரயோஜனமாயிருந்திருக்கும் என்று நம்புகிறேன். பெற்றோராகிய நாம் நம் பிள்ளைகளுக்கும், நம் பேரக் குழந்தைகளுக்கும் இதைக் கற்றுக் கொடுப்போம். கட்டாயம் அவர்கள் இதை தெரிந்து வளர வேண்டும். தேவன் அதற்கு உதவி செய்வாராக! ஆமென்!! ✝

# சமரசமில்லாத வெற்றி

Dr. **ஏபில் நாயகம்**

**பி**ரியமானவர்களே! உங்கள் யாவருக்கும் அருமை இரட்சகர் இயேசுவின் இன்ப நாமத்தில் வாழ்த்துக்கள். வாலிப நாட்கள் ஒருவருடைய வாழ்க்கையில் மிகவும் முக்கியமானவைகள் என்கிற உண்மை அனைவரும் அறிந்ததே. அந்த நாட்களை முழுமையாகப் பிரயோஜனப்படுத்திக்கொள்ள வேண்டும் என்று பலரும் நினைப்பதுண்டு. வாழ்க்கையில் முன்னேறிச் செல்ல வாலிப நாட்களை சரியாகப் பயன்படுத்த வேண்டும் என்று ஏறக்குறைய அனைவராலும் நாம் அறிவுறுத்தப்படுவோம். ஆனால், ஒரு கிறிஸ்தவ வாலிப சகோதரனோ அல்லது சகோதரியோ, வாலிபப் பருவத்தை கிறிஸ்தவரல்லாத மற்றவர் களைப் போல அணுக முடியாது. ஆம், நாம் அனைவரும் அறிந்திருக்கிறபடி, வாலிபர்கள் **பல சமரசங்களை** செய்து அதன் மூலம் முன்னேற்றம் அடைய விரும்புவார்கள். அது மிகவும் ஆபத்தான ஒரு காரியம். சமரசங்கள் ஒருவருக்கு வெற்றியையும் முன்னேற்றத்தையும் கொடுத்தாலும் தேவனுடைய பார்வையில் நாம் செய்யும் சமரசம் எப்படி பார்க்கப்படும் என்ற சிந்தை நமக்கு எப்பொழுதும் இருப்பது அவசியம்.

நல் நடத்தையிலிருந்து நம்மை விலக்கும் அனைத்துமே நாம் செய்யும் சமரசங்கள்; ஆகும். அது எங்கு வேண்டுமானாலும் இருக்கலாம். வேலை செய்யும் இடங்களில், நண்பர்களோடு கூட்டாக இருக்கும் தருணங்களில், படிக்கும் இடங்களில் என்று பல வகையில் நாம் சமரசம் செய்ய வாய்ப்புள்ளது. சமரசம் செய்வதன் மூலம் தேவனுடைய கட்டளைகளை மீறுகிறாம் என்று நாம் புரிந்து கொள்ள வேண்டும். நம் ஆசைக்காக, நம் நண்பர்களின் விருப்பத்திற்காக பணி இடங்களில் நம் உயர் அதிகாரிகளின் எதிர்பார்ப்புக்காக என்று நாம் **சமரசம்** செய்ய வாய்ப்புகள் அதிகமாகவே இருக்கின்றன.

தேவன் எதிர்பார்க்கும் உண்மையிலும், உத்தமத்திலும் நாம் சமரசம் செய்யாமல் இருக்கு நம்மாலான அனைத்து முயற்சிகளையும் நாம் எடுக்க வேண்டும். வேதாகமத்தில் வாலிப் பருவத்தில் இது போன்ற சமரசங்கள் ஏதும் செய்யாமல், தேவனுக்கு உண்மையாயிருந்த தானியேலின் வாழ்க்கையை கவனித்து, நாமும் அவ்வாறு இருக்க நமக்கு உதவியாக இருக்கும் சில பண்புகளைக் கற்றுக் கொள்வோம்.

**1. தானியேல் உறுதியான தீர்மானம் உள்ளவனாக இருந்தான்:**

இஸ்ரவேல் புத்திரரில் சில வாலிபர்கள் பாபிலோனின் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரின் அரமனையில் சேவகம் பண்ணும்படி அழைத்துவரப்பட்டார்கள். அவர்களில் ஒருவன் தான் தானியேல் 1:8 ல் தானியேல் ராஜாவின் போஜனத்தினாலும் அவர் பானம் பண்ணும் திராட்ச ரசத்தினாலும் தன்னைத் தீட்டுபடுத்தாதபடி பிரதானிகளின் தலைவனிடத்தில் வேண்டிக்கொண்டான். இங்கே ஏன் தானியேல் ராஜாவின் போஜனத்தை விலக்கினான் என்பதற்கு பல காரணங்கள் உள்ளது என்று கூறப்பட்டாலும், நாம் கவனிக்க வேண்டியது, தானியேல், தனக்குள்ளாக செய்து கொண்ட தீர்மானமும், அதை நிறைவேற்றவும், அதில் உறுதியாயிருக்க அவன் எடுத்த முயற்சிகளுமே.

கிறிஸ்துவைப் பின்பற்ற வேண்டும் என்ற தீர்மானத்தை பலர் நம் வாழ்க்கையில் எடுத்து இருக்கிறோம். நாம் எடுத்த தீர்மானத்தை சமரசமில்லாமல் நிறைவேற்றவும், அதில் உறுதியாக இருக்கவும் நாம் எவ்வளவு கவனமாயிருக்கிறோம்? சிந்திப்போம்.

சமரசம் செய்யாமல் இருந்தால் நன்மைகள் கிடைக்காது என்ற பயமே பலரை சமரசத்திற்குள்ளாக்கியிருக்கிறது. ஆனால், தானியேலின் வாழ்க்கையை நாம் கவனித்தால், தீர்மானத்தில் உறுதியாயிருந்ததினிமித்தமும், குற்றமில்லாமல் தன்னை காத்துக்கொண்டதினிமித்தமும் தேவன் தானியேலை உயர்த்தினார். என்றும் தேவனுடைய பார்வையில் அனுகிரகம் கிடத்தது என்றும் பார்க்கிறோம். எனவே, கிறிஸ்தவர்களாகிய நமக்கு அந்த பயம் அவசியமில்லை.

எனவே, சமரசமில்லாத வெற்றியை அறுவடை செய்யும் கிறிஸ்தவர்களாக நாம் வாழ முயற்சி செய்வோம். தேவன் நமக்கு துணையாகயிருப்பார். ஆமென்.

சிறுவர் பகுதி




**Hai** குட்டீஸ் நீங்கள் எல்லோரும் நலமாயிருக் கிறீர்களென்றும், எங்கள் கட்டுரைகளை வாசித்து தேவ அறிவை பெருக்கிக் கொண்டிருக்கிறீர்களென்றும் நம்புகிறேன். இன்று நான் நாமெல்லாரும் செய்யும் ஒன்றைப் பற்றி உங்களிடம் சொல்லப்போகிறேன். நாமெல்லாரும் நம் தவறுகளை மறைக்க முயற்சிப்போம். அப்படித்தானே? நம் சில வேளைகளில் தவறுசெய்துவிட்டு மற்றவர்களிடம் அதை மறைக்கப் பார்ப்போம். குழந்தையாயிருந்த போது நானும் கூட அப்படிச் செய்திருக்கிறேன்.

நாம் ஆதியாகமம் மூன்றாம் அதிகாரத்தை வாசிப்போம். இந்த வசனப்பகுதியில் ஆதாமும், ஏவாளும் தேவன் புசிக்கக் கூடா தென்று தடைசெய்திருந்த தோட்டத்தின் நடுவில் இருந்த விருட்சத்தின் கனியைப் புசித்து மிகப்பெரிய தவறைச் செய் தார்கள். சாத்தான் அவர்களை தன் இனிய, தந்திரமான சொற்களால் சோதித்தான். ஆதாமும், ஏவாளும் அந்த சோதனை யில் விழுந்து பாவம் செய்தார்கள். அவர்கள் தேவனுடைய வார்த்தைக்கு எதிராக பாவம் செய்வதைத் தெரிந்து கொண் டார்கள். பாவம் செய்தபிறகு, தோட்டத்தில் தேவன் உலாவுவதை கண்ட அவர்கள் என்னச் செய்தார்கள்? சிருஷ்டிகரிடமிருந்து ஒளிந்து கொண்டார்கள். இது சாத்தியமா? பிள்ளைகளே, நீங்கள் உங்கள் பெற்றோருக்கு கீழ்ப்படியாத போது அவர் களிடமிருந்து மறைந்து கொள்ளவோ, அல்லது ஒளிந்து கொள்ளவோ முடியுமா?

பிரியமான பிள்ளைகளே, நான் ஏற்கனவே என்னுடைய முந்தைய கட்டுரைகளில் சொன்னபடி தீமையை விட்டு விலகி, நம்மை வெறுத்து தேவனுடைய வழிகளில் நடப்பதாகும். நீங்கள் தவறு செய்து விட்டு அதற்காக பயப்படகூடாது. அது தவறான

பயம் பிள்ளைகளே. நீங்கள் தவறு செய்துவிட்டு அதை மூடி மறைக்க முயற்சிக்கக்கூடாது. நீங்களெல்லாரும் உங்கள் பெற்றோரைக் கனம் பண்ணி அவர்களுக்குக் கீழ்ப்படியுங்கள். அது தான் உங்களுக்கான தேவ கட்டளை பிள்ளைகளே. எனவே, வேதாகமத்தை தொடர்ந்து வாசியுங்கள், அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து, உங்கள் பெற்றோரை கனம் பண்ணுங்கள்.

**அன்புடன், உங்கள் பிரெய்ஸி அக்கா.** ✝

---

## கேள்விகள்

✎ சர்ப்பம் ஏவாளிடம் என்ன சொன்னது?

✎ தேவ பயம் என்றால் என்ன?

✎ ஆதாமும் ஏவாளும் எப்படி ஒளிந்து கொண்டார்கள்?

✎ தேவன் அவர்களுக்கு என்ன செய்தார்?

✎ சாத்தான் ஆதாமையும், ஏவாளையும் கனியை புசிக்க பலவந்தம் பண்ணினானா? அல்லது சாத்தானின் வார்த்தைகளைக் கேட்ட பிறகு புசிப்பதை அவர்களாகவே தெரிந்து கொண்டார்களா? ✝

---

## லூக்கா நூலில் மட்டும் காணப்படும் உவமைகள்

*காணாமல் போன ஆடு (லூக்கா. 15:1-7)*

*காணாமல் போன காசு (லூக்கா. 15:8-10)*

*காணாமல் போன மைந்தன் (லூக்கா. 15:11-24)*

*காணாமல் போன மூத்தகுமாரன் (லூக்கா. 15:25-32)*

# கொலோசெயர் நிருபத்தில் இயேசுவின் தன்மைகள்

- பரமப்பிதா கிறிஸ்துவின் தகப்பன் [1:13].
- கிறிஸ்து பிதாவின் அன்பு குமாரன் [1:13].
- கிறிஸ்து அதரிசனமான தேவனுடைய தற்தரூபம் [1:15].
- கிறிஸ்து சர்வசிருஷ்டிக்கும் முந்தின பேறானவர் [1:15]
- கிறிஸ்து சர்வ சிருஷ்டிக்கும் முந்தினவர் [1:17].
- கிறிஸ்துவுக்குள் எல்லாம் நிலை நிற்கிறது [1:15].
- கிறிஸ்து ஆதியானவர் [1:18].
- கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறானவர் [1:18].
- கிறிஸ்து எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கிறார் [1:18].
- கிறிஸ்துவுக்குள் சகல பரிபூரணமும் வாசமாயிருக்கிறது [1:18].
- கிறிஸ்துவுக்குள் ஞானம், அறிவு அடங்கியிருக்கிறது. [2:3].
- கிறிஸ்துவுக்குள் தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் வாசமாயிருக்கிறது [2:9] .

# புதிய ஏற்பாட்டு ஆசாரியர்கள்

Bro. **பென்னி மார்ட்டின்**

**அ**ருமையான திருமறை ஆசான் வாசகர்களே உங்கள் யாவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துதல்களை தெரிவித்துக் கொள்கிறேன். நாம் குழந்தைகளாயிருந்த போது நாட்டின் சட்டதிட்டங்கள் நம்மைக் கட்டுப்படுத்தவில்லை, கவலைகளை விட்டுவிட்டு பட்டாம் பூச்சிகளைப் போல பறந்து திரிந்தோம். அந்நாட்களின் நினைவலைகள் இன்னும் நம் நினைவை விட்டு நீங்காமல் நிலைத்திருந்து நம்மை மலைத்துப்போகச் செய்கின்றன. நாம் குழந்தைகளாயிருந்த போது சொந்தமாக நாம் வாகனம் வைத்திருக்கும் உரிமை நமக்கு இல்லாதிருந்தது, ஓட்டுப்போடும் உரிமையும் நமக்கு இல்லாதிருந்தது. ஆனால், நாம் பெரியவர் களான போது நாட்டின் சட்டதிட்டங்கள் நம்மை கட்டுப்படுத்த தொடங்கிவிட்டன. இப்போது நமக்கு ஓட்டுரிமை உண்டு. சில நாட்களுக்கு முன்பு தான் அந்த தேர்தல் திருவிழாவில் பங்கெடுத்து ஆட்சியாளர்களை தெரிந்தெடுத்தோம். அது மட்டுமல்ல சொத்துக்களை வாங்கும் உரிமையும் விற்கும் உரிமையும் இப்போது நமக்கு உண்டு. உரிமைகளைப் பெற்றிருக்கும் நாம் பொறுப்புக்களையும் பற்றிக் கொள்ளவேண்டும். ஏனென்றால் உரிமையும் பொறுப்பும் ஒன்றொடொன்று கைக்கோர்த்து செல்கின்றன. அதை யாரும் மறிக்கவோ, பறிக்கவோ முடியாது. ஓட்டு மொத்தமாக நாம் பார்க்கும் போது, சிறுவயதில் நம்மை கட்டுப்படுத்திய சட்டம் வேறு இப்போது நம்மைக் கட்டுப் படுத்துகிற சட்டம் வேறு.

முதல் நூற்றாண்டில் வாழ்ந்த யூதர்களும் இதற்கு விதிவிலக்கல்ல. அவர்களும் இதேவிதமான சூழ்நிலையில்தான் வாழ்ந்தார்கள், அவர்கள் மோசேயின் பிரமாணத்தின் கீழ் வாழ்ந்து கொண்டு பலிகளைச் செலுத்தினார்கள், பண்டிகைகளை ஆசாரித்தார்கள், இன்னும் மோசேயின் மூலமாக தங்களுக்க கொடுக்கப்பட்ட எல்லா பிரமாணங்களையும்

கைக்கொண்டார்கள். அதன் பிறகு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்குப் பிறகு பெந்தேகொஸ்தே நாளில் கிறிஸ்தவம் உதயமானது. அந்நாளில் கிறிஸ்துவைப் பின்பற்ற தீர்மானித்த சில யூதர்கள் மோசேயின் பிரமாணத்தை விட்டுவிட்டு தேவனுடைய புதிய உடன்படிக்கைக்குள் பிரவேசித்தார்கள். இவ்விதமாக அவர்கள் புதிய சட்டத்திட்டங்களை தழுவ தயாரானார்கள். அவர்கள் கிறிஸ்தவத்திற்கு வந்த உடனே பெற்றுக்கொண்ட சந்தோஷங்களுள் ஒன்று தேவன் ஆசாரியர்களாக விசேஷித்த நபர்களை தெரிந்து கொள்ளாமல், கிறிஸ்துவைப் பின்பற்றும் எல்லோருக்கும் அந்த வாய்ப்பை கொடுத்ததுதான் (வெளி 1:6).இப்போது நாம் ஆசாரித்துவத்தைக்குறித்து வேத வசனங்களின் வெளிச்சத்தில் காண்போம்.

I **ஆசாரித்துவம் என்னும் பாக்கியம்.**

புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவுக்குள்ளாக இருக்கும் நாமேல்லாருமே ஜீவனுள்ள கற்களைப் போல ஆவிக்கேற்ற மாளிகையாகவும், இயேசு கிறிஸ்து மூலமாக தேவனுக்குப் பிரியமான, ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும் படிக்குப் பரிசுத்த ஆசாரியக் கூட்டமாகவும் கட்டப்பட்டு வருகிறோம் (I பேதுரு 2:5). நாம் தேவனால் ஆசாரியர்களாய் ஆக்கப்பட்ட விதம் நம்மை ஆச்சரியத்தில் ஆழ்த்த வேண்டும். முற்காலங்களில் தேவன் லேவியர்களை ஆசாரியர்களாக்கி கனப்படுத்தினார். இந்நாட்களில் கிறிஸ்துவுக்குள் வந்த ஒவ்வொருவரையும் தம்முடைய ராஜ்யத்தில் ஆசாரியர்களாக்கி கனப்படுத்தியிருக்கிறார். மோசேயின் பிரமாணத்தின் படி வாழ்ந்த ஆசாரியர்கள் தேவனோடு விசேஷித்த உறவைக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு அனுதினமும் தேவனுடைய சமூகத்தில் சஞ்சரிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. இது மற்ற இஸ்ரவேலர்களுக்கு கிடைக்கவில்லை. ஒவ்வொரு பாளையத்திலும் இவர்களுடைய சுடாரம் ஆசாரிப்புக் கூடாரத்திற்கு நேர் எதிரே காணப்பட்டது. இஸ்ரவேலர்கள் கானான் தேசத்தில் குடியேறினபோது அவர்களுக்கு நிலம் பங்கிட்டுக்கொடுக்கப்பட்டது, அவர்கள் வசிக்க நாற்பத்தெட்டு பட்டணங்களும், சுற்றிலிமுள்ள மேய்ச்சல் பகுதிகளும் கொடுப்பட்டன. இவர்கள் தங்கள் நேரத்தை தேவனுடைய ஊழியத்திற்கு கொடுக்கத்தக்க மற்ற கோத்திரங்கள் இவர்களுக்கு உதவ வேண்டுமென தேவனால் கட்டளையிடப்பட்டிருந்தார்கள்.

ஆசாரிப்புக்கூடாரத்தில் பலியிடப்படுவதற்காக இஸ்ரவேலர்களால் கொண்டு வரப்படுகிறவைகளெல்லாம் ஆசாரியர்களாலே மாத்திரம் தான் தேவனுக்குப் பலியாக செலுத்தப்படும். இவ்விதமாக பழைய ஏற்பாட்டின் நாட்களில் தேவனோடு நெருக்கமான உறவு வைத்து கொள்ளும் சிலாக்கியம் தேவனால் கொடுக்கப்பட்டது. இவர்களை தேவன் தமக்குரிய சொந்த ஜனங்களாக ஏற்றுக்கொண்டார். புதிய ஏற்பாட்டில் தேவன் நம் ஒவ்வொருவரையும் ஆசாரியர்களாக ஆக்கின உண்மை நம்மை ஆச்சரியத்தில் ஆழ்த்தியிருக்கிறதா?

## II **ஆசாரித்துவம் என்னும் சிலாக்கியம்.**

புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரத்தில் அங்கம் வகிக்கும் நாமெல்லாருமே ஆசாரியர்களாக தேவனிடத்தில் கிட்டிச் சேரும் சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம். நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மூலமாக தேவனிடத்தில் மிக எளிதாக கிட்டிச் சேர முடியும். தேவனுக்கும் மனிதனுக்கும் இடையே இருந்த எல்லா தடைகளும் சிலுவையில் கிறிஸ்துவால் தகர்த்தெறியப்படடன. இதைக்குறித்து பவுல் அந்தப்படியே நாம் இருதிறத்தாரும் ஒரே ஆவியினாலே பிதாவினிடத்தில் சேரும் சிலாக்கியத்தை அவர் மூலமாய் பெற்றிருக்கிறோம் என்று சொல்கிறார் (எபேசியர் 2:18). ஆனால் இன்று தேவனால் நாம் ஆசாரியர்கள் ஆக்கப்பட்டிருக்கிறபடியால் இது நாம் அவருக்காக உத்தமத்துடனும் உத்வேகத்துடனும் உழைக்க நம்மை உற்சாகப்படுத்த வேண்டும். தேவன் அவருடைய சமூகத்தில் நம்மை வரவேற்று அவருடைய ஆசீர்வாதத்தை அனுபவிக்கும் வாய்ப்பைக் கொடுத்து அவரை அணுகுவதறஙகான சுதந்தரத்தையும் கொடுத்திருக்கிறார். கிறிஸ்தவர்களாக நாம் ஆசாரித்துவப்பணியை செவ்வென செய்ய வேண்டும். புதிய ஏற்பாட்டு ஆசாரியர்களாகிய நாம் மிருகப்பலிகளை எல்லாம் செலுத்த வேண்டிய அவசியமில்லை. மாறாக, பாடல், ஜெபம், கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறுதல், கொடுத்தல் தேவனுடைய வார்த்தைகளைப் படித்தல் போன்ற ஆவிக்குரிய பலிகளைச் செலுத்திக் கொண்டிருக்க வேண்டும். பாடலைப் பற்றி எபிரெய ஆசரியர் சொல்லும் போது உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரப்பலி என்று சொல்கிறார் (எபிரெயர் 13:15).

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நமக்கு பிரதான ஆசாரியராக இருக்கிறபடியால் ஆசாரியர்களாக இருக்கும். நாம் எங்கேயும், எப்போதும் தேவனிடத்தில் கிட்டிச் சேர முடியும். நம் இரட்சகராகிய இயேசு கிறிஸ்து நமக்காக ஒரே தரம் மகா பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசித்து நித்திய மீட்பை உண்டுப்பண்ணினார் (எபிரெயர் 9:12). பழைய ஏற்பாட்டின் பிரதான ஆசாரியர்கள் வருடத்துக்கு ஒரு முறை பாவ நிவர்த்திக்காக மிருக பலி செலுத்தி, அதின் இரத்தத்தை எடுத்துக் கொண்டு மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிப்பார்கள். ஆனால் கிறிஸ்து நமக்காக தேவனுடைய சமூகத்தில் பிரத்தியட்சமாகும் படி பிரவேசித்திருக்கிறார் (எபிரெயர் 9:21,25). கிறிஸ்து என்றென்றும் நம் பிரதான ஆசாரியராயிருக்கிற படியால், கிறிஸ்தவர்களாகிய நாம் தேவனுடைய வார்த்தையை உலகெங்கும் பிரசங்கிக்கும் படியாக கட்டளையிடப்பட்டிருக்கிறோம். ஆசிரியப்பணி ஓர் உன்னதப் பணி என்று சொல்வார்கள். ஆனால், உள்ள படி பார்த்தால் கிறிஸ்தவர்களைப் பொறுத்தவரையில் ஆசாரியப்பணி உன்னதப்பணியாயிருக்கிறது. இருள்சூழ்ந்த இவ்வுலகில் அருள்நாதராம் இயேசு கிறிஸ்து ஆசாரியப்பணியை செய்ய நம்மை அழைத்திருக்கிற படியால் அழைக்கப்பட்ட அழைப்புக்கு பாத்திரவான்களாக நடந்து கொள்வோம். ✝

## லூக்கா நூலில் மட்டும் காணப்படும் உவமைகள்

| | | |
|---|---|---|
| *மத்தேயு* | - | *யூதர்களுக்கு* |
| *மாற்கு* | - | *ரோமர்களுக்கு* |
| *லூக்கா* | - | *கிரேக்கர்களுக்கு* |
| *யோவான்* | - | *ஒவ்வொருவருக்கும்* |

# முகக்கவசமும், சமூக இடைவெளியும்

**Bro. பாண்டியன்**

**ஆ**ண்டவர் இயேசுவின் நாமத்தில் உங்களுக்கு கிருபையும், சமாதானமும் உண்டாவதாக. பரவலைத் தடுக்க சுகாதாரத் துறையும், அரசாங்கமும் பல நடவடிக்கைகளை எடுத்து வருவதை நாம் அறிவோம். அதில் முக்கியமானது. இந்த முகக்கவசமும், சமூக இடைவெளியும் உலக சரித்திரத்தில் முதலாம் உலகப்போர், இரண்டாம் உலகப்போர் என நாம் படித்திருப்பதைப் போல இந்தக் கொரோனா நோய் இரண்டாம் அலை, மூன்றாம் அலை எனத் தொடர்ந்து கொண்டிருப்பதாக செய்தியில் அறிகிறோம்.

இந்த வியாதியின் தடுப்பு முறைகள் நமக்குப் புதிது போலத் தோன்றினாலும், வேதத்தில் மோசேயின் காலத்திலேயே இந்தத் தடுப்பு முறைகளைப் பற்றி தேவன் கட்டளையிட்டுள்ளது நம்மை ஆச்சரியப்படுத்துகிறது. சுமார் கி.மு. 3500 எழுதப்பட்ட யாத்திராகமம் புத்தகத்தில் 30:18–20 பகுதியில் கைகளைக் கழுவிச் சுத்திகரிப்பதைப்பற்றி முக்கியப்படுத்தப்பட்டுள்ளது. இது இப்போதைய **சானிடைசர்** ஆலோசனைக்கு ஒப்பாயிருக்கிறது. மேலும், தற்போதைய முகக்கவசத்தினால் வாயை மூடுவது பற்றி, லேவி 13:45,46 ல் வியாதியின் சமயத்தில் தனிமைப்படுத்துதல் பற்றியும் குறிப்பிட்டுள்ளது. அதிலும் இப்போது உள்ளது போலவே இரண்டு வாரத் தனிமைப்படுத்துதல் குறிப்பிடப்பட்டுள்ளது (லேவி 13:54) மிகுந்த ஆச்சரியத்தை ஏற்படுத்துவதாக உள்ளது. நோய் பரவாமல் தடுக்கும் இந்த விசேஷ சிகிச்சை முறைகள் முன்கூட்டியே தேவ ஞானத்தால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

முகக்கவசத்தின் முக்கிய நோக்கம் இருமல், தும்மல் மூலமாக கிருமிகள் பரவாமல் தடுப்பதாகும். ஆவிக்குரிய ரீதியில் நம் வாயின் முலமாக கெடுதல் வராமல் தடுக்க தேவனுடைய வார்த்தையானது நமக்குப் பலவித ஆலோசனை தந்துள்ளது. அதை கிறிஸ்தவர்கள் முகக்கவசத்தைப் போல பயன்படுத்த கடமைப்பட்டவர்களாய் இருக்கிறோம். பிறனை அவமதிப்பது மதிகெட்டதாய் இருக்கிறது (நீதி 11:12). பரஸ்திரீகள் வாய் ஆழமான படுகுழி; கர்த்தருடைய கோபத்திற்கு ஏதுவானவன் அதிலே விழுவான் (நீதி 22:14). அது மாத்திரமல்ல மூடனுடைய

வாயும், உதடுகளும் அவனுக்கு கேட்டையும், அவன் ஆத்துமாவுக்கு கண்ணியையும் வரவழைக்கும் கிருமியைப் போன்றதாயிருக்கிறது [நீதி 18:9]. அதனால் தான் நீதிமானுடைய நாவு சுத்த வெள்ளி என்றும், துன்மார்க்கனுடைய மனம் அற்பவிலையும் பெறாது என்றும் ஞானி சாலமோன் கூறுகிறார்.

உண்மையில் நம்முடைய வாயைப் பயன்படுத்த வேண்டிய விதத்தை வேதம் சொல்வதை கவனிப்போம். முக்கியமாக தேவனை துதிக்கவே நமது நாவை தேவன் நமக்குக் கொடுத்துள்ளார் [சங் 35:28 யாக் 3:810] ஆக, நாம் பிறரை சபிக்க நமது வாயை பயன்படுத்தாதபடிக்கு கவசமிட வேண்டும். கெட்ட வார்த்தை ஒன்றும் நம் வாயிலிருந்து புறப்படக்கூடாத கிருமி ஆகும். அடுத்து நியாயத்தையும், ஞானத்தையும் பேச தேவன் நமக்கு வாயைக் கொடுத்துள்ளார். [சங் 37:30]. ஆனால் இவ்வுலகம் கொரோனாவைப் போன்ற அநியாயத்தினாலும், அஞ்ஞானிகளாலும் நிறைந்து இருப்பதால், தேவன் நம்மை இவ்வுலகத்தினின்று இரட்சித்துள்ளார்.

கிறிஸ்தவர்கள் சமாதானத்தை உண்டு பண்ணவே தேவன் விரும்புகிறார் [மத் 5:9] பிரிவினையை உண்டு பண்ணுகிறவர்கள் தொற்று நோயைப் போன்றவர்களாய் இருக்கிறார்கள். சரி, நாம் ஏன் தேவனைத் துதிக்க வேண்டும்? சங் 51:14,15 ன் படி தேவன் நம்மை இரத்தப் பழிகளுக்கு நீங்கலாக்கி காப்பாற்றுவதால், மற்றும் நமக்குப் பொல்லாப்பு தேடுகிறவர்களை தேவன் வெட்கப்படுத்தி நம் பட்சமாய் இருப்பதால் நாம் துதிக்கிறோம் [சங் 126:1,2] அதில் முக்கியமாக தேவனை அறிக்கை பண்ணவும் [ரோமர் 14:11] அவருடைய நீதியான வசனங்களை எடுத்துச் சொல்லவும் நம் வாயைப் பயன்படுத்த வேண்டும் [சங் 119:172].

முகக்கவசம் நம் மூக்கை மூடுவது போல, ஒரு கிறிஸ்தவன் அந்நியக் காரியங்களில் தலையிடாமல் அதாவது, மற்றவர் விஷயங்களில் தேவையில்லாமல் தன் மூக்கை நுழைக்கக் கூடாது [I பேது 4:15] Social Distance எனப்படும். விலகியிருப்பது பற்றி ஆவிக்குரிய ஆலோசனையாகவும் அடிப்படை காரியங்களாக அப் 15:20 ன் படி விக்கிரகப் படையல், வேசித்தனம், நெருக்குண்டு செத்தது மற்றும், இரத்தத்திற்கு விலக்கியிருக்க வேண்டும். அது போல தீமையை விட்டு விலகியிருக்க வேதம் போதிக்கின்றது. [சங் 34:14].

ஆனால், சிலர் தீமை செய்கிறவர்கள் தான் நன்றாயிருக்கிறார்கள் என்று ஆதங்கப்படுகிறார்கள் (மல் 3:15). அப்படியல்ல அவர்கள் அழிந்து போவார்கள் என்றும் தேவனுக்கு பயப்படுகிறவர்களே நன்றாயிருப்பார்கள் என்றும் பார்க்கிறோம். (மல் 4:1,2). நமதாண்டவர் இயேசுவும் தீமையோடே எதிர்த்து நிற்க வேண்டாம் என்கிறார். தீமைக்கு தீமை செய்யாதிருக்க பவுலும் நினைவு படுத்தியிருக்கிறார். அதே போல வீண் பேச்சு, விபரீதங்கள் தர்க்கங்கள், கட்டுக்கதைகள், போன்ற விஷயங்களிலும் நாம் தள்ளியிருக்க வேண்டும். I தீமோ6:20.

அப்போஸ்தலர்களில் பிரதானவனாக எண்ணப்பட்ட பேதுருவும் ஒரு முக்கிய Social distance ஐ I பேது 2:11, 12 ல் வலியுறுத்துகிறார். அதாவது, நீங்கள் ஆத்துமாவுக்கு விரோதமாய்ப் போர் செய்கிற மாம்ச இச்சைகளை விட்டு விலகி நல்நடக்கையோடு இருக்க புத்தி சொல்லுகிறார். இதற்கு மாறாக, சிலர் தேவனை விட்டு விலகும் அபாயத்தில் உள்ளனர். அதற்கான எச்சரிப்பு எபி 3:12 ல் காண்கின்றோம். அப்படி யோவான் தேவ சமூகத்தை விட்டு விலகின போது பயமும் திகிலும் அவனையும், அவனைச் சார்ந்தவர்களையும் ஆட் கொண்டதை நாம் மறந்து விடக்கூடாது (யோனா 1:3,10).

நம்முடைய விசுவாசத்தை பிறர் கவிழ்த்துப் போட நாம் ஒருக்காலும் அனுமதிக்கக்கூடாது. ஏனெனில், சிலர் உயிர்த்தெழுதல் நடந்தாயிற்று என்று சத்தியத்தை விட்டுவிலகி சென்றதை 2 தீமோ 2:18 ல் வாசிக்கின்றோம். ஆதலால், பிரியமானவர்களே! நீங்கள் விழுந்து போகாதபடி எச்சரிப்பாய் இருந்து கிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளருங்கள். தேவ ஆசீர் உங்களுக்கு உண்டாவதாக ஆமென்.

✝

---

## <u>பிலிப்பியர் நிருபத்தில் கிறிஸ்து</u>

| | | |
|---|---|---|
| கிறிஸ்து | - | நம் ஜீவன் (1:21) |
| கிறிஸ்து | - | நம் முன்மாதிரி (2:5) |
| கிறிஸ்து | - | நம் நம்பிக்கை (3:8) |
| கிறிஸ்து | - | நம் பெலன் (4:13) |

# உபதேசங்கள் தேவனுடையது

V. ஆசீர்வாதம் [மறைவு]

**2. தேவன் தீர்க்கதரிசிகள் மூலமாக கொடுத்த சாட்சி**

மேலும் தேவன் பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசிகள் மூலமாக தம்முடைய குமாரனைக்கொண்டு சத்தியத்தை வெளிப்படுத்தப் போகிறார் என்பதை முன்னுரைத்திருக்கிறார். [உபாகமம் 18 : 18,19]. தேவன் மோசேயை நோக்கி, உன்னைப் போல ஒரு தீர்க்கத்தரிசியை நான் அவர்களுக்காக அவர்கள் சகோதரரிலிருந்து எழும்பப்பண்ணி, என் வார்த்தைகளை அவர் வாயில் அருளுவேன், நான் அவருக்குக் கற்பிப்பதையெல்லாம் அவர்களுக்குச் சொல்லுவார். என் நாமத்தினாலே அவர் சொல்லும் என் வார்த்தைகளுக்குச் செவிகொடாதவன் எவனோ அவனை நான் விசாரிப்பேன் என்றார்.

மேற்குறிப்பிட்ட தீர்க்கத்தரிசி இயேசுவானவரே என்று அப்போஸ்தலனாகிய பேதுரு அப்போஸ்தலர் 3 : 23-26 வசனங்களில் திருஷ்டாந்தப்படுத்தியிருக்கிறான். தேவன் மோசேயின் மூலம் இஸ்ரவேல் ஜனங்களுக்கு நியாயப் பிரமாணத்தைக் கொடுத்ததுபோல, உலகத்துக்கு வெளிப்படுத்த வேண்டிய சத்தியங்களை, இஸ்ரவேல் ஜனங்கள் மத்தியிலிருந்து எழும்பப்போகிற இயேசு என்னும் தீர்க்கத்தரிசியின் வாயில் அருளிச் செய்து, தாம் கற்பிப்பதையெல்லாம் இயேசு சொல்லுவார் என்று தேவன் மோசேயைக் கொண்டு இதை தீர்க்கதரினமாக உரைத்து, இயேசுவைக் குறித்து சாட்சி கொடுத்தார்.

மேலும், ஏசாயா 42 : 1, 3 இதோ, நான் ஆதரிக்கிற என் தாசன், நான் தெரிந்துகொண்டவரும், என் ஆத்துமாவுக்கு பிரியமான வரும் இவரே, என் ஆவியை அவர்மேல் அமரப்பண்ணுவேன், அவர் புறஜாதிகளுக்கு நியாயத்தை வெளிப்படுத்துவார். இவர் நியாயத்தை உண்மையாக வெளிப்படுத்துவார் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. தேவன், தாம் தெரிந்துக் கொண்டவரும் தம்முடைய ஆத்துமாவுக்கு பிரியமானவருமாகிய இயேசுவின் மேல் பரிசுத்த ஆவியை அமரப்பண்ணுவார். புறஜாதிகள்

தேவனுடைய நியாயங்களை இயேசு கிறிஸ்துவின் மூலமாக அறிந்துக் கொள்வார்கள். இயேசுவானவர் சகல ஜாதிகளுக்கும் தேவனுடைய நியாயங்களை அதாவது தேவனுடைய சத்தியங்களை சத்தியத்தின்படியே வெளிப்படுத்துவார் என்று தேவன் இயேசுவைக் குறித்து சாட்சி கொடுத்திருக்கிறார்.

மேலும், ஆபகூக் 2 : 14, ஏசா 11 : 9. ஆகிய வசனங்களில் சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறதுபோல பூமி கர்த்தருடைய மகிமையை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும் என்றும் (எண் 14 : 21)ல் பூமியெல்லாம் கர்த்தருடைய மகிமையினால் நிறைந்திருக்கும் என்றும் என்னுடைய ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன் என்று சொல்லப்பட்டிருக்கிறது. கர்த்தருடைய மகிமை என்பது இயேசுவின் சிலுவைப்பாடுகளும் அவருடைய உயிர்தெழுதலும் அடங்கிய செய்தியாகும். யூதாஸ்காரியோத் இயேசுவைக் காட்டிக் கொடுக்கும்படி புறப்பட்டு போனபின்பு இயேசு, இப்பொழுது மனுஷ குமாரன் மகிமைப் படுகிறார், தேவனும் அவரில் மகிமைப்படுகிறார். சீக்கிரமாய் அவரை மகிமைப்படுத்துவார். (யோவா 13 : 31, 32) என்று சொல்லுகிறார். மேலும், கிறிஸ்து இவ்விதமாகப் பாடுபடவும் தமது மகிமையில் பிரவேசிக்கவும் வேண்டியதில்லையா? (லூக் 24 : 26) என்றும் சொல்லுகிறார். உங்கள் விசுவாசமும் நம்பிக்கையும் தேவன் மேலிருக்கும்படி அவரை மரித்தோரிலிருந்து எழுப்பி, அவருக்கு மகிமையைக் கொடுத்தார் (1 பேதுரு 1 : 21). இவ்விதமாய் இயேசு மரணத்தை உத்தரித்ததினிமித்தம் மகிமையினாலும் கனத்தினாலும் முடிசூட்டப்பட்டதைக் காண்கிறோம் (எபி 2 : 9) இயேசு கிறிஸ்துவின் மரணமும், உயிர்த்தெழுதலும் அடங்கிய மகிமையின் சுவிசேஷம் உலகமெங்கும் சகல சிருஷ்டிகளுக்கும் அறிவிக்கப்பட்டு வருகிறது. கர்த்தருடைய மகிமையை அறிகிற அறிவினால் பூமி நிறைந்திருக்கிறது. இப்படியாக சுவிசேஷத்தை அறிகிற அறிவினால் உலகம் நிரப்பப்படும் என்பதையே கர்த்தருடைய மகிமையினால் பூமி நிறைந்திருக்கும் என்று தீர்க்கதரிசனமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. தேவன் தம்முடைய குமாரன் மூலமாகவும் தம்முடைய குமாரனைக் கொண்டும் இவ்வுலகத்துக்கு தம்மையும் – தம்முடைய சித்தத்தையும் வெளிப்படுத்தப் போகிறார் என்பதையே தீர்க்கதரிசனங்களாக முன்னுரைத்து சாட்சிகளை ஏற்படுத்தினார். தேவன் தம்முடைய

குமாரனைக் குறித்து சாட்சியும் கொடுத்தார். குமாரன் மூலமாக வெளிப்படுத்தப்போகிற சத்தியங்களைக் குறித்தும் சாட்சி கொடுத்தார். தம்முடைய குமாரனை சத்தியமாகவும், சத்தியத்திற்கு சாட்சியாகவும் ஏற்படுத்தினார். தேவனுடைய குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் அந்த சாட்சியை தனக்குள்ளே கொண்டிருக்கிறான், தேவனை விசுவாசியாத வனோ தேவன் தம்முடைய குமாரனைக் குறித்துக் கொடுத்த சாட்சியை விசுவாசி யாததினால் அவரை பொய்யராக்குகிறான் (1 யேவான் 5 : 10) நாம் அவரை பொய்யராக்குகிறவர்களாயிராமல் அவருடைய சாட்சியை ஏற்றுக்கொண்டு அவரை மகிமைப்படுத்துகிறவர்களாய் இருப்போமாக.

### C. எனக்கு செவி கொடுங்கள் என்று இயேசு சொல்லுகிறார்

லூக் 6:46 என்னை ஆண்டவரே ஆண்டவரே என்ற நீங்கள் சொல்லியும், நான் சொல்லுகிறபடி நீங்கள் செய்யாமற் போகிதென்ன?3

**யோவா 14:15** நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்.

**யோவா 14:10** நான் பிதாவின் கற்பனைகளைக் கைக் கொண்டு அவருடைய அன்பில் நிலைக்கிறது போல, நீங்களும் என் கற்பனைகளைக் கைக்கொண்டிருந்தால் என்னுடைய அன்பிலே நிலைத்திருப்பீர்கள்.

**யோவா 15:10** நான் பிதாவின் கற்பனைகளைக் கைக்கொண்டு அவருடைய அன்பில் நிலைத்திருக்கிறது போல, நீங்களும் என் கற்பனைகளைக் கைக்கொண்டிருந்தால் என்னுடைய அன்பிலே நிலைத்திருப்பீர்கள்.

**யோவா 14 : 23** ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான், அவனில் என் பிதா அன்பாயிருப்பார். நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம் பண்ணுவோம்.

**யோவா 14 : 28** என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக் கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிறதொன்றிருக்கிறது, நான் சொன்ன வசனமே அவனைக் கடைசிநாளில் நியாயந்தீர்க்கும்.

**யோவா 14 : 29** என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்.

**யோவான் 8:51** ஒருவன் என் வார்த்தையைக் கைக் கொண்டால் அவன் என்றென்றைக்கும் மரணத்தைக் காண்பதில்லை என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

**யோவான் 15:14** நான் உங்களுக்குக் கற்பிக்கிற யாவையும் நீங்கள் செய்வீர்களானால் என் சிநேகிதராயிருப்பீர்கள்.

**யோவான் 14:21** என் கற்பனைகளைப் பெற்றுக்கொண்டு அவைகளை கைக்கொள்ளுகிறவனே என்னிடத்தில் அன்பாயிருக்கிறான்.

---

## நாளும், நடப்பும்

- *CBSE - ல் படிக்கும் 10 வகுப்பு மாணவர்களுக்கு தேர்வு ரத்து.*
- *பெட்ரோல் விலை உயர்வு காரணமாக ஆந்திராவில் பைக்கில் மூன்று சக்கர வண்டி கட்டி மக்கள் பயணம்*
- *+2 தேர்வு தள்ளிவைப்பதை குறித்து அரசாங்கம் ஆலோசிப்பதாக தலைமை செயலர் தகவல்.*
- *கொரோனா அதிகரிக்கும் நிலையில் முதுகலை மருத்துவ படிப்பிற்கு நீட் தேர்வு அவசியமா திரு. ஸ்டாலின் கேள்வி.*
- *தமிழகம் முழுவதும் முக கவசம் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.*
- *கூடுதல் தடுப்பூசி கோரி மத்திய அரசுக்கு தமிழ்நாடு அரசு வேண்டுகோள்.*